ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

**வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்**

**(பதிவு எண்: 226 / 1992)**




**சத்திரப்பட்டி சாலை,**
**வேதபுரீ, தேனி. - 625 531**






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
4, தை 2026

Date:
18, January 2026

www.vedaneri.org

வகுப்பு 20

அறத்துப்பால் - இல்லறவியல்

அதிகாரம் : 14

# ஒழுக்கமுடைமை

## (ஆசாரம் உடையவராக இருத்தல்)

தத்தம் வாழ்க்கை நிலைக்கேற்ற ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் ஒழுக்கம் உடைமையாகும்.

உடல், வாக்கு, மனம் எனும் முக்கரணங்களையும் அதர்ம வழிச்செல்லாமல் அடக்கியவர்கள் அவற்றை அறவழியில் செலுத்துதல்.

அடக்கம் – செய்யக்கூடாததைச் செய்யாதிருத்தல்.

ஒழுக்கம் – செய்ய வேண்டியதைச் செய்தல்.





**குறள்கள்: 1, 2 ஒழுக்கத்தின் சிறப்பு**

1.உயிரினும் மேலானது.

2.அஃதே துணை, வருந்தியும் காக்க.

**குறள்கள்: 3-7 நன்மையும் தீமையும்**

ஒழுக்கம் உள்ளவிடத்து உண்டாகும் நன்மையும் இல்லாதவிடத்து உண்டாகும் தீமையும்.

3.ஒழுக்கம் இருந்தால் உயர்ந்த குலம், இல்லாவிட்டால் இழிகுலம்.

4.உயர்ந்த குடிப்பிறப்புக் கெடும்.

5.ஆசாரம் இல்லாதவனுக்கு மேன்மை இல்லை.

6.குற்றத்தைஅறிந்தோர் தவறார்.

7.ஒழுக்கம் இருந்தால் உயர்வு, இல்லாவிட்டால் இழிவு.

**குறள்: 8 பின்விளைவு - இம்மை மறுமைப் பயன்**

இன்பமும் துன்பமும் வரும்.

**குறள்: 9 வாக்கில் அறத்தைக் கடைப்பிடித்தல்.**

**குறள்: 10 ஒழுக்கமே அறிவுடைமை**

செயலில் அறத்தக் கடைப்பிடித்தல்.

.

01

# ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கமே அனைவருக்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதனால் அந்த ஒழுக்கமானது உயிரைவிட (மேலானதாக) பாதுகாக்கப்பட வேண்டியதாகும்.

ஒழுக்கம் = ஆசாரம் = நன்னடத்தை. அறநூல்கள் மற்றும் பெரியவர்கள் கூறும் நடத்தையைப் பின்பற்றுதல்.
விழுப்பம் = மேன்மை, சிறப்பு, ச்ரேயஸ்

பாகுபாடின்றி அனைவருக்கும் ஒழுக்கம் மேன்மையைத் தருவதால் பொதுப்படக் (ஸாமான்ய தர்மமாகக்) கூறினார்.



உயிருடையது இன்பம் துன்பம் இரண்டையும் அனுபவிக்கிறது. ஆனால் ஒழுக்கம் இன்பம் மட்டுமே தரும் ஆதலால் உயிரை விடச் சிறந்ததாகும்.

02

# பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை.

ஒழுக்கத்தை கடினமாக (வருந்தியும் இருக்கிறது என்று விட்டுவிடாமல்) கடைபிடிக்க வேண்டும். அறநூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து மனதை ஒருமுகப்படுத்தி தெளிந்து அறிந்தாலும் துணையாய் முடிவது அந்த ஒழுக்கமே.

பரிந்து = வருந்தி, துன்பப்பட்டு
ஓம்பி = பாதுகாத்து - கடைப்பிடித்து
தெரிந்து = ஆராய்ந்து
தேரினும் = தெளிந்து அறிந்தாலும்
துணை - இன்பத்தைத் தரும் துணை

ஒழுக்கம் நன்மை தரும் என்பது சாதாரணமாக அனைவருக்கும் தெரிந்தது. அதைவிட மேலானது ஏதாவது இருக்கிறதா என்று எல்லா அறநூல்களையும் ஆராய்ந்து பார்த்தாலும் இறுதி முடிவாக வருவது ஒழுக்கமே ஆகும்.

அந்நதானம், கோதானம், பூதானம், ஸ்வர்ணதானம், வித்யாதானம் போன்ற எல்லா அறங்களையும் விடத் தனிமனித ஒழுக்கமே மேலானது. மற்ற அறங்கள் வரையறைக்குட்பட்ட புண்யத்தைத் தரும். ஒழுக்கமானது ஜீவனைப் பண்படுத்தி வரையறையற்ற மோக்ஷம் வரை துணையாக வருவதனால் மேலானதாகும்.

03

# ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடையவனாக இருத்தலே மனிதப்பண்பாகும். ஒழுக்கம் தவறுதல் கீழான பிறவிகளில் கொண்டு சேர்த்து விடும்.

பிறவிகளுள் உயர்வான மனிதப்பிறவியில் பிறந்திருந்தாலும் ஒருவன் அறத்தைப் பின்பற்றவில்லையென்றால் அதனால் பாபத்தை அடைந்து மனித இனத்தை விடக் கீழான பிறவிகளில் பிறக்க நேரிடும்.




04

# மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

வேதம் பயின்றவன் அதனை மறந்துவிட்டாலும் மீண்டும் படித்துக் கொள்ள முடியும். ஆனால் அவனது குலவொழுக்கம் குறைந்தால் பிறவியானது கெட்டுப்போய்விடும்.

ஓத்து = ஓதப்படுவது - வேதம்.
பார்ப்பான் = மெய்ப்பொருளைப் பார்ப்பவர், வேதம் பயின்றவர், ப்ராஹ்மணர்.

ஒழுக்கம் தவறினால் உயர்குடிப் பிறப்பும் மாறிவிடும். இதனால் குடிப்பிறப்பை விட ஒழுக்கம் உயர்வானது என்பது கூறப்பட்டது.



05

# அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாமற்போவது போல ஒழுக்கம் இல்லாதவனிடத்திலும் மேன்மையடைதல் என்பது இல்லை.

அழுக்காறு = பொறாமை
ஆக்கம் = செல்வம்
உயர்வு = உயர்ச்சி. உயர்வடைதல்

பொறாமை உடையவனது சுற்றமும் கெடுவது போன்று ஒழுக்கம் இல்லாதவனது சுற்றமும் உயர்வடைவது இல்லை என்பது உவமையால் பெறப்பட்டது.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166)



06

# ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து.

ஒழுக்கம் தவறுதலானது (கீழ்ப்பிறவியாகிய) குற்றம் உண்டாகும் வழி என்றறிந்து ஒழுக்கத்திலிருந்து மனவலிமையுடையவர் தவறமாட்டார்.

ஒல்காமை = சுருங்காமை.
ஒல்கார் = (ஒழுக்கத்தில்) சுருங்கார் - குறைவுபடாதவர்.
உரவோர் = உறுதி உடையவர். ஒழுக்கம் எனும் விரதத்தில் உறுதி உடையவர்.
ஏதம் - குற்றம்
படுபாக்கு = உண்டாகும் வழி.

மனவுறுதி உடையவர் ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாகும் தன்மையை அறிந்து கடைபிடிப்பதற்குக் கடினமாக இருந்தாலும் ஒழுக்கத்திலிருந்து விலகமாட்டார்.

இன்ன அறம் செய்வேன் அல்லது கடைபிடிப்பேன், இன்ன தீமை விலக்குவேன் என்று தன் சக்திக்கு ஏற்றவாறு ஏற்படுத்திக் கொள்வது விரதம் ஆகும். தர்ம அதர்மங்களின் வலிமையை அறிந்து எவ்வளவு தடைகள் வந்தாலும் அதிலிருந்து மாறுபடாமல் இருப்பது மனவுறுதியாகும்.

அறம் செய்வேன் எனும் உறுதிக்கு உதாரணம் - கர்ணன்.
கொடுத்த வாக்கினை மாறமாட்டேன் (ஸத்யத்தைக் கடைபிடிப்பேன்) எனும் உறுதிக்கு உதாரணம் - அரிச்சந்த்ரன்.

07

# ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

அனைவரும் ஒழுக்கத்தினால் உயர்வை அடைவர். ஒழுக்கம் தவறுதலால் தாம் அடையக்கூடாத பழியை அடைவர்.

எய்தாப் பழி = அடையக்கூடாத பழிச்சொல். ஒரு ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் குற்றத்தை விமர்சிப்பவர் அவரது மற்ற ஆசாரங்களையும் ஸந்தேஹப்படுவர்.

இவை ஐந்து பாட்டாலும் ஒழுக்கம் உள்ளவிடத்து உண்டாகும் நன்மையும் அது இல்லாதவிடத்து உண்டாகும் தீமையும் கூறப்பட்டது.



08

# நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.



ஒருவனுக்கு நல்ல ஒழுக்கமானது புண்ணியத்திற்குக் காரணமாக இருந்து இருமையிலும் இன்பத்தைத் தரும். தீய ஒழுக்கமானது பாபத்திற்குக் காரணமாக இருந்து இருமையிலும் துன்பத்தைக் கொடுக்கும்.

நன்றி = நன்மை = புண்ணியம்
வித்து = காரணம்
என்றும் = இருமையிலும்
இடும்பை = துன்பம்


நல்லொழுக்கம் புண்ணியத்திற்குக் காரணம் என்றதலால் தீயொழுக்கம் பாபத்திற்குக் காரணம் என்பதும் தீயொழுக்கம் இருமையிலும் துன்பம் தரும் என்றதனால் நல்லொழுக்கம் இருமையிலும் இன்பம் தரும் என்பதும் பெறப்பட்டது.

இதனால் பின்விளைவது சொல்லப்பட்டது.



09

# ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்.



மறந்தும் தீயசொற்களை தன்னுடைய (நல்லதைப் பேசுகின்ற) வாயால் பேசுதல் ஒழுக்கம் உடையவர்க்கு இயலாது.

வழுக்கியும் = மறந்தும் - கவனமின்றியும்
தீயசொற்கள் = பொய், புறங்கூறுதல் போன்றவை

'வாயால்' சொல்லுதல் என்றது 'எப்பொழுதும் நல்ல சொற்களையே பேசிப் பழகிய', என்று தாம் கூறவிரும்பியதன் சிறப்பை முடித்தற்பொருட்டு ஆகும்.

10

# உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
# கல்லார் அறிவிலா தார்.

(அறநூல்களைக் கற்றறிந்து அதன்படி வாழும்) உயர்ந்தவர்கள் வாழும் வழியில் வாழ்தலை அறியாதவர் பலநூல்களைக் கற்றவராக இருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

உலகம் = உயர்ந்தவர்கள். கல்விகேள்வி, ஆசார அனுஷ்டானங்களால் வாழ்வில் உயர்ந்தவர்கள்
ஒட்ட ஒழுகல் = பின்பற்றி வாழுதல்

அறநூல்கள் கூறியவற்றின் பொருளை உணர்ந்து சிரத்தையுடன் பின்பற்றி நடப்பவர்கள் உயர்ந்தவர்கள். தங்கள் வாழ்வில் உயர்வை அடைந்தவர்கள். மற்றவர்கள் உயர்வதற்கு வழிகாட்டுபவர்கள். அறநூல்கள் கூறியவற்றுள் தற்காலத்துக்கு பொருந்தாதவற்றை விலக்கியும் கூறாதனவற்றுள் தற்காலத்துக்கு தேவையானவற்றை சேர்ந்தும் கூறுபவர்கள் ஸமுகத்திற்கு வழிகாட்டியாயுள்ள உயர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள் வாழ்வோடு ஒட்டி வாழுதல் ஒருவனுக்கு அறிவுடைமை ஆகும்.

கல்வியின் பயன் அறிவுடைமை, அறிவின் பயன் ஒழுக்கமுடைமை. கற்ற ஒருவன் ஒழுக்கமுடையவனாக இல்லையென்றால் அவன் பலகற்றும் அறிவில்லாதனே.

இவையிரண்டு பாட்டாலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கத்தை ஒருவாறாகத் தொகுத்துக் கூறினார்.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com